**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093876

1. District : விருதுநகர் மாவட்டம் PS: ஊ.த.த. பிரிவு, காவல்நிலையம் விருதுநகர் Year: 2020 ஆண்டு FIR No.: 06/2020 மு.த.அ. எண் Date: 20.11.2020 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a) Prevention of
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption (Amendment)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period நேர அளவு : 19.11.2020 / 18.00 hrs Time from நேரம் முதல் : 20.11.2020 / 0130 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : 20.11.2020 / 1300 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் நில அளவைப் பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி சுமார் 28 கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. பொன்ராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : துரை சேகரன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி துணை ஆய்வுக்குழு அலுவலர் விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. பால சுப்பிரமணியன், வட்டத்துணை ஆய்வாளர், நில அளவைப் பிரிவு வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி
2) திரு. பொன்ராஜ், த/பெ சுந்தரம், க.எண். 250/1, [illegible] காலனி, [illegible], சிவகாசி
3) திரு. ஆறுமுகம், த/பெ பரமசிவம், க.எண். 6/1037, பாக்கியலட்சுமி ஹோட்டல், [illegible] நாச்சியாபுரம் ரோடு, [illegible], சிவகாசி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

[illegible] தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் (பா. கருப்பையா, காவல் துணைக் கண்காணிப்பாளர்)

இன்று 20.11.2020ம் தேதி மதியம் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அலுவலகத்தில் பணியில் இருந்த போது, துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. பொன்ராஜ். அவர்கள் 1300 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டடம், நில அளவைப் பிரிவு அறையில் வைத்து தயார் செய்த திடீர் திணை ஆய்வு அறிக்கை, மற்றும் திரு. பாலசுப்பிரமணியன், உட்ட துணை ஆய்வாளர், நில அளவைப் பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி, தனிநபர் திரு. பொன்ராஜ், த/பெ சுந்தரம், மற்றும் தனிநபர் திரு. முருகன் த/பெ பரமசிவம், க.எண்., ஆகியோர்களின் வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம், நீலநிறக் டெம்ளைன் 4 ரெஜிஸ்டர் என்று அச்சிடப்பட்ட நோட்டு மற்றும் சிவப்புநிற சின்னத்துணிப்பை, பிரதான் கவர் பழைய காகிதம் மற்றும் ஆவணங்களுடன் (தனித்தாள் இணைக்கப் படுகிறது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பா. கருப்பையா
Rank: நிலை DSP ..........No. எண் ..........
VSAC / VNR

விருதுநகர் ஊ.த.க.பிரிவின் குற்ற எண்.06/2020 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் தொடர்ச்சி:- இணைத்து நடவடிக்கை எடுக்கவேண்டி கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் D.K.பொன்ராஜ், 49/2020, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். (குடிமைப்பொருள் வட்டாட்சியர், விருதுநகர் தாலுகா, விருதுநகர்). பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - வட்டாட்சியர் அலுவலக கட்டிடம், நில அளவைப்பிரிவு, சிவகாசி - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் விருதுநகர் தாலுகா குடிமைப்பொருள் வட்டாட்சியராக கடந்த 16.09.2020ம் தேதி முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 09.10.2020ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று 19.11.2020ம் தேதி மாலை சுமார் 04.45 மணியளவில் விருதுநகர் தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள குடிமைப்பொருள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும் நில அளவைப்பிரிவு அலுவலகத்தில் தனிநபர்கள் மூலமாக பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அரசுப்பணிகளை செய்து தருவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 05.00 மணிக்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.பா.கருப்பையா மற்றும் காவலர்களுடன் மேற்படி சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும் நில அளவைப்பிரிவு அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்ய நேற்று 19.11.2020ஆம் தேதி மாலை சுமார் 05.15 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு சென்று சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும் நில அளவைப்பிரிவு அலுவலகத்தில் மாலை 06.00 மணிக்குச் சென்று இன்று 20.11.2020ஆம் தேதி அதிகாலை 01.30 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது திரு.மு.பாலசுப்பிரமணியன், வட்டத்துணை ஆய்வாளர். நில அளவைப்பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி என்பவரின் பீரோவிற்கு அடியில் சுருட்டி மடிக்கப்பட்ட நிலையில் கிடந்த அரசால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக ரூ.700/-ம், திரு.பொன்ராஜ், த/பெ.சுந்தரம்,

கதவு எண்.250/1, ஸ்டேட் பேங்க் காலனி, சாட்சியாபுரம், சிவகாசி என்ற தனிநபரின் பேண்ட் பாக்கெட்டில் திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் என்று அச்சடிக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்புநிற சின்ன துணிப்பையில் இருந்த ரூ.20,000/-மும் மற்றும் அதே பேண்ட் பாக்கெட்டில் பிரவுன்கலர் பழைய கர்சிப்பிற்குள் இருந்த ரூ.37,000/-மும், அதேபோல் மற்றொரு தனிநபரான திரு.ஆறுமுகம், த/பெ.பரமசிவம், கதவு எண்.6/1037, பாக்கியலட்சுமி ஹோட்டல், செங்கமலநாச்சியாபுரம் கிராமம், சாட்சியாபுரம், சிவகாசி என்ற தனிநபரின் பேண்ட் பாக்கெட்டில் இருந்த அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணம் ரூ.12,500/-ம் ஆக மொத்தம் ரூ.70,200/- நிலஅளவைப் பிரிவு அலுவலர்களுக்கு கொடுக்க வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக் கருதி அந்த பணம் ரூ. 70,200/-ம், அந்த பணம் இருந்த துணிப்பை மற்றும் கர்சிப் ஆகியவையும், மேலும் தனிநபர் திரு.பொன்ராஜ் வந்த இருசக்கர வாகனத்திலிருந்த (TN84X5295 Honda Activa) சிவகாசி மாவட்டம் அனுப்பன்குளம் கிராமத்தை சேர்ந்த மணிகண்டன் மனைவி காளீஸ்வரி என்பவர் கிரையம் பெற்ற புல எண். 470/1க்கு பட்டா மாறுதல் செய்து பட்டா வழங்க கோரி மனு எண்.141077/2020ன் பிரகாரம் மனு செய்து, SR.No.2472/2020, நாள். 24.10.2020ன்பிரகாரம் நில அளவைப்பிரிவு அலுவலகத்தில் நடவடிக்கை எடுத்து நிலுவையில் இருந்த அலுவலக கோப்பும் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக சிவகாசி, வட்டாட்சியர் அலுவலகம், நிலஅளவை பிரிவில் பணிபுரியும் வட்டத்துணை ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன், தனிநபர்களான திரு.பொன்ராஜ் மற்றும் திரு.ஆறுமுகம் ஆகியோர்கள் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 19.11.2020ம் தேதி மாலை 06.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இன்று 20.11.2020ஆம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. 1) ஆய்வு செய்த அலுவலகம்: நிலஅளவைப் பிரிவு, வட்டாட்சியர் அலுவலக கட்டிடம், சிவகாசி. 2) ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்:19.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் 3) ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர்: திரு.பொன்ராஜ், (49/2020),மாவட்ட. துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம்.(குடிமை பொருள் வட்டாட்சியர்,விருதுநகர் தாலுகா). 4)ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்: திரு.பா.கருப்பையா,காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். 5)ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள்: 1)திரு.மு.பாலசுப்பிரமணியன் (49/2020), வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 2)திரு.த.கார்த்திக் (33/2020), வட்ட

சார்ஆய்வாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 3)திருமதி.ச.முத்துமாரி, (38/2020), முதுநிலை வரைவாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 4)திரு.ச.பெரியசாமி, (38/2020), நில அளவர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 5)திருமதி.சி.கொண்டம்மாள் (37/2020), சார் ஆய்வாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 6) திரு.ச.சுரேஷ் (36/2020), சார் ஆய்வாளர், நில அளவை பிரிவு, ட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி.7) திரு.ரா.தினேஷ்பாபு (28/2020), நில அளவர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி. 6) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த தனிநபர்கள்: 1)திரு.பொன்ராஜ் (67/2020), த/பெ.சுந்தரம், கதவு எண்.250/1, ஸ்டேட் பேங்க் காலனி, சாட்சியாபுரம், சிவகாசி. 2) திரு.ஆறுமுகம் (60/2020), த/பெ.பரமசிவம், கதவு எண்.6/1037, பாக்கியலட்சுமி ஹோட்டல், செங்கமலநாட்சியாபுரம் கிராமம், சாட்சியாபுரம், சிவகாசி. 3)திரு.மாரிகணேஷ் (27/2020), த/பெ.கணேசன், கதவு எண்.3/251 C, சிவாஜி நகர், செங்கமலநாட்சியாபுரம் கிராமம், நமஸ்கரித்தான்பட்டி, சிவகாசி.4) திரு.கணேஷ் (27/2020), த/பெ.மாரியப்பன், கதவு எண்.2/1733, விவேகானந்தர், காலனி, சிவகாசி.5) திருமதி. மு.முத்துலட்சுமி (32/2020), க/பெ.குமரேசன், கதவு எண்.6/1745, ஆசிரியர் காலனி, சாட்சியாபுரம், சிவகாசி.6) திருமதி.மூ.பானு (28/2020), க/பெ.மூர்த்தி, கதவு எண்.18, ஆதிநாடார் தெரு, சிவகாசி. விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் நிலஅளவைப் பிரிவு அலுவலகத்தில் தனிநபர்கள் மூலமாக பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அரசுப்பணிகளை செய்து தருவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 19.11.2020ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு காலம் 3 மற்றும் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் நிலஅளவைப் பிரிவில் திடீர் இலஞ்ச ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி நிலஅளவைப் பிரிவு அலுவலகம் சிவகாசியில் தெற்குபார்த்த வாசலுடன் கூடிய வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் உள்ளே நுழைந்தவுடன் இடதுபக்கம் வடக்குபார்த்த இரண்டு வாசல்களுடன் செயல்பட்டு வருகிறது. மேற்படி நிலஅளவைப் பிரிவானது கண்ணாடியுடன் கூடிய கேபின்களால் மூன்று அறைகளாக பிரிக்கப்பட்டு, அதில் இரண்டு அறைகள் குளிரூட்டப்பட்ட அறைகளாக இருந்தது. முதல் நுழைவாயில் வழியே உள்ளே நுழைந்தவுடன் உள்ள முதல் குளிரூட்டப்பட்ட அறையில் கிழக்கு பார்த்து ஒரு இருக்கையும், அதற்கடுத்து அந்த இருக்கைக்கு வலதுபக்கம் கடைசியில் வடக்குபார்த்து ஒரு

இருக்கையும் ஆக மொத்தம் இரண்டு இருக்கைகள் இருந்தன. அந்த கிழக்கு பார்த்திருந்த இருக்கையில் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரும், வடக்குப்பார்த்திருந்த இருக்கையில் காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரும் இருந்தனர். அதற்கடுத்த குளிரூட்டப்பட்ட அறையில் அதாவது நடுஅறையில் வடக்குப்பார்த்து ஒன்றன்பின் ஒன்றாக இருந்த இரண்டு இருக்கைகளும், முதல் இருக்கைக்கு வலதுபக்கம் கிழக்குப்பார்த்து ஒரு இருக்கையும், இரண்டாவது இருக்கைக்கு வலதுபக்கம் தெற்குபார்த்து ஒரு இருக்கையும் ஆக மொத்தம் நான்கு இருக்கைகள் இருந்தன. வடக்குப்பார்த்து ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு இருக்கைகளில் முதல் இருக்கை ஆளில்லாமல் காலியாகவும், அந்த இருக்கைக்கு வலதுபக்கம் கிழக்குப்பார்த்திருந்த இருக்கையில் காலம் 6 வரிசை எண்.5ல் கண்ட தனிநபரும், அவருக்கு அருகில் வலதுபக்கம் காலம் 6 வரிசை எண்.4ல் கண்ட தனிநபரும், இரண்டாவது இருக்கையில் காலம் 5 வரிசை எண்.3ல் கண்ட நபரும், அவருக்கு எதிரில் காலம் 6 வரிசை எண்.3ல் கண்ட தனிநபரும், அந்த இருக்கைக்கு வலதுபக்கம் தெற்குபார்த்திருந்த இருக்கையில் காலம் 6 வரிசை எண்.6ல் கண்ட தனிநபரும் இருந்தனர். அதற்கடுத்த அறையில் அதாவது நிலஅளவைப் பிரிவின் இரண்டாவது நுழைவுவாயில் வழியே உள்ளே நுழைந்தவுடன் உள்ள அறையில் மேற்குப்பார்த்து அடுத்தடுத்து மூன்று இருக்கைகளும், அந்த மூன்றாவது இருக்கைக்கு எதிரே / முன்பு மேற்கு பார்த்து ஒரு இருக்கையும் ஆக மொத்தம் நான்கு இருக்கைகள் இருந்தன. மேற்குப்பார்த்து அடுத்தடுத்து இருந்த மூன்று இருக்கைகளில் முறையே காலம் 5 வரிசை எண்.4, 5 மற்றும் 6ல் கண்ட நபர்களும், மூன்றாவது இருக்கைக்கு எதிரே மேற்கு பார்த்திருந்த இருக்கையில் காலம் 5 வரிசை எண்.7ல் கண்ட நபரும் இருந்தனர். மேற்படி அலுவலக அதாவது சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிட நுழைவுவாயில் முன்பாக நின்றுகொண்டிருந்த காலம் 6 வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்ட தனிநபர்களை நிலஅளவைப் பிரிவிற்குள் காலம் 5 வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்ட நபர்கள் இருந்த அறைக்கு அழைத்துச் சென்று, அவர்களிடம் அதாவது காலம் 5 மற்றும் 6ல் கண்ட நபர்களிடம் விபரம் சொல்லி திடீர் ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண். 1ல் கண்ட வட்டத்துணை ஆய்வாளர் திரு.மு.பாலசுப்பிரமணியன் அவர்களையும், அவரது இருக்கை, கைப்பை மற்றும் பீரோவையும் சோதனை செய்ய அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.420/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (19.11.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் சொன்னார். அதை அலுவலக தன்கையிருப்பு பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளீர்களா என்று கேட்க, அந்த பதிவேடு அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார். இருப்பினும் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த கருப்புநிற கைப்பையில் அவரது பெயரில்

உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளை சேமிப்பு கணக்கு (சேமிப்பு கணக்கு எண். 10921996157) புத்தகம் - 1, பாண்டியன் கிராம வங்கி, சிவகாசி சாட்சியாபுரம் கிளை சேமிப்பு கணக்கு (சேமிப்பு கணக்கு எண். 15074902373) புத்தகம் - 1, அவரது மனைவி திருமதி.விஜயலட்சுமி பெயரில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளை சேமிப்பு கணக்கு (சேமிப்பு கணக்கு எண். 37964492334) புத்தகம் - 1 ஆகிய 3 சேமிப்பு கணக்கு புத்தகங்களும், அவரது மனைவி திருமதி.விஜயலட்சுமி பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளையில் உள்ள HTL 38039876017 வங்கி கணக்கில் 06.06.2020, 12.06.2020, 02.07.2020, 28.07.2020 மற்றும் 18.08.2020 ஆகிய தேதிகளில் முறையே ரூ.50,000/-, ரூ.70,000/-, ரூ.77,000/-, ரூ.90,000/- மற்றும் ரூ.99,000/- ஆகிய தொகைகள் பணமாக பணம் செலுத்தும் செலான் மூலம் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளதாக உள்ள பணம் செலுத்தும் செலான்கள் - 5ம் இருந்தது. அதில் அவரது மனைவி பெயரில் உள்ள பணம் செலுத்தும் செலான்கள் பற்றி அவரிடம் கேட்க, தன்னுடைய மனைவி டெய்லரிங் தொழில் செய்துவருவதாகவும், அதில் கிடைத்த வருமானத்தை அவரது பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளையில் பெற்ற வீட்டுக்கடன் கணக்கில் (கணக்கு எண். HTL 38039876017) பணமாக செலுத்தியதற்கான செலான்கள் என்றும் கூறினார். ஆகையால் அந்த வங்கியில் பணம் செலுத்திய செலான்கள் மற்றும் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகங்கள் ஆகியவை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது பீரோவிற்கு அடியில் சுருட்டி மடிக்கப்பட்ட நிலையில் ரூபாய் தாள்கள் கிடந்தது. அவற்றை எடுத்துப் பிரித்து எண்ணிப்பார்க்க, அதில் ஒரு 200 ரூபாய் நோட்டும், ஒரு 500 ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.700/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். ஆகையால், அந்த பணம் ரூ.700/-ம் லஞ்சபணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண். 2 முதல் 7 வரை உள்ளவர்களையும், அவர்களது இருக்கைகளையும் சோதனை செய்ய, அவரவர்களிடமிருந்த கைப்பை மற்றும் மணிபர்ஸ் ஆகியவற்றிலிருந்து முறையே ரூ.332/-, ரூ.30/-, ரூ.7,800/-, ரூ.750/-, ரூ.1,160/- மற்றும் ரூ.160/-ம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரவர்களிடம் கேட்க, அது அவரவரது சொந்த பணம் என்றும், அவரவர்கள் இன்று (19.11.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் சொன்னார்கள். ஆகையால் அந்த பணம் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், காலம் 6 வரிசை எண்.5 மற்றும் 6 ஆகிய தனிநபர்களையும், அவர்களது இருக்கைகளையும் மற்றும் காலம் 6 வரிசை எண்.3 மற்றும் 4 ஆகிய தனிநபர்களையும் சோதனை செய்ய, அவரவர்களிடமிருந்த கைப்பை மற்றும் மணிபர்ஸ் ஆகியவற்றிலிருந்து முறையே ரூ.200/-, ரூ.10/-, ரூ.260/- மற்றும் ரூ.20/-ம் இருந்தது. அந்த பணம் பற்றி

அவரவர்களிடம் கேட்க, அது அவரவரது சொந்த பணம் என்றும், அவரவர்கள் இன்று (19.11.2020) வேலைக்கு கொண்டுவந்ததாகவும் சொன்னார்கள். ஆகையால் அந்த பணம் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், காலம் 6 வரிசை எண்.3ல் கண்ட தனிநபரிடம் எதற்காக இந்த அலுவலகத்திற்குள் இருந்தீர்கள் என்று கேட்க, பட்டா விண்ணப்பம் செய்வது தொடர்பாக விசாரிப்பதற்காக காலம் 5 வரிசை எண்.3ல் கண்ட நபரை சந்திக்க அலுவலகத்திற்குள் வந்திருந்ததாக கூறினார். பின்னர், காலம் 6 வரிசை எண்.4ல் கண்ட தனிநபரிடம் எதற்காக அலுவலகத்திற்குள் இருந்தீர்கள் என்று கேட்க, காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபர் தன்னை டீ வாங்கி கொடுக்க அவ்வப்போது வரச்சொல்வார் என்றும், அவ்வாறு இன்றும் வரச்சொன்னதின்பேரில் அலுவலகத்திற்குள் வந்திருந்ததாகவும் கூறினார். ஆகையால் காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரிடம் அதுபற்றி கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி, அவருக்கு முன்பு வட்ட சார்ஆய்வாளராக பணிபுரிந்த திரு.சிவசாமி என்பவரிடம் மேற்படி திரு.கணேஷ் நண்பராக பழகி இருந்ததாகவும், அந்த பழக்கத்தின்பேரில் அவரை அவ்வப்போது டீ வாங்கி கொடுக்க அலுவலகத்திற்கு வரச்சொல்வதாகவும் கூறினார். பின்னர், காலம் 6 வரிசை எண்.5 மற்றும் 6ல் கண்ட தனிநபர்களிடம் எதன் அடிப்படையில் யாருடைய உத்தரவின்பேரில், அலுவலக இருக்கைகளில் அமர்ந்து பணிகளை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்க, அதற்கு அவர்கள் காலம் 5 வரிசை எண் 1ல் கண்ட நபரான நிலஅளவைப்பிரிவு வட்டத்துணை ஆய்வாளர் அவர்களது வாய்மொழி உத்தரவின்பேரில், வேலைக்கு தகுந்தாற்போல் கூலி என்ற அடிப்படையில் அலுவலக இருக்கைகளில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்ததாக கூறினார்கள். ஆகையால் காலம் 5 வரிசை எண் 1ல் கண்ட நபரான நிலஅளவைப்பிரிவு வட்டத்துணை ஆய்வாளர் அவர்களிடம் அதுபற்றி கேட்க, அலுவலகத்தில் அதிக பணிப்பளு காரணமாக முன்பிருந்தே இதேபோல் வெளிநபர்களை வைத்து வேலைக்கு தகுந்தாற்போல் கூலி என்ற அடிப்படையில் அலுவலக இருக்கைகளில் அமர்ந்து பணிசெய்ய அனுமதித்து வருவதாகவும், அதேபோல் தானும் வாய்மொழி உத்தரவில் காலம் 6 வரிசை எண்.5 மற்றும் 6ல் கண்ட தனிநபர்களை வைத்து வேலைக்கு தகுந்தாற்போல் கூலி என்ற அடிப்படையில் அலுவலக இருக்கைகளில் அமர்ந்து பணிசெய்ய அனுமதித்ததாக கூறினார். பின்னர், சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிட நுழைவுவாயில் முன்பாக நின்றுகொண்டிருந்த காலம் 6 வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்ட தனிநபர்களை காலம் 5 வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்ட நபர்கள் முன்பாக சோதனை செய்ய, காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட தனிநபரான திரு.பொன்ராஜ் என்பவரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் என்று அச்சடிக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்புநிற சின்ன துணிப்பையில் கத்தையாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து

எண்ணிப்பார்க்க, அதில் 2000 ரூபாய் நோட்டுக்கள் 10 ஆக மொத்தம் ரூ.20,000/- இருந்தது. அதேபோல் அதே வெளுப்பு வேஸ்ட் பாக்கெட்டில் பிரவுன்கலர் பழைய கர்சிப்பிற்குள் சுருட்டி வைத்தாற்போல் சுற்றையாக பணமும் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 74 ஆக மொத்தம் ரூ.37,000/- இருந்தது. அத்துடன் தனியாக 100 ரூபாய் நோட்டுக்கள் 3, 10 ரூபாய் நோட்டுக்கள் 4 ஆக மொத்தம் ரூ.340/- இருந்தது. அந்த மொத்த பணம் ரூ.57,340/-ம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் ரூ.57,340/-ல் ரூ.340/ தன்னுடைய செலவிற்கு கொண்டுவந்ததாகவும், மீதி பணம் ரூ.57,000/- கட்டிட வேலை பார்ப்பவர்களுக்கு கூலி கொடுப்பதற்காக கொண்டுவந்ததாகவும் கூறினார். ஆகையால், ரூ.340/-ஐ திரும்ப அவரிடமே ஒப்படைத்துவிட்டு, மீதி பணம் ரூ.57,000/-ம் உங்களுக்கு எப்படி கிடைத்தது என்று கேட்க, அதற்கு அவர் பேங்கில் வேலை பார்த்து ரிடையர்டு ஆன தனது நண்பர் திரு.ஜெயச்சந்திரன் என்பவரிடம் நேற்று (18.11.2020) ரூ.1,00,000/- வாங்கியதாகவும், அதில் தான் கட்டிவரும் வீட்டிற்கு சிமெண்ட், எலெக்ட்ரிக் சாமான்கள் மற்றும் கொத்தனார் கூலி இவைகளுக்கு செலவு செய்ததுபோக மீதமிருந்த பணம் என்றும் கூறினார். அவர் கூறிய இந்த தகவலை அவரது நண்பர் திரு.ஜெயசந்திரனின் அலைபேசி எண். 94891-94179க்கு தொடர்பு கொண்டு கேட்டபோது, தான் அவ்வாறு பணம் எதுவும் திரு.பொன்ராஜ் என்பவருக்கு கொடுக்கவில்லை என்றும், சிவகாசி தாலுகா அலுவலகத்தில் பட்டா பெற்றுத்தருவது சம்பந்தமாக அவர் எனக்கு ஏற்கனவே பழக்கமானவர் என்றும், அவர்மூலமாக ஏற்கனவே பட்டாக்கள் பெற்றிருப்பதாகவும் கூறினார். ஆகையால், அந்த பணம் ரூ.57,000/-த்தை நிலஅளவைப் பிரிவு அலுவலர்களுக்கு கொடுக்க வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக் கருதி கைப்பற்றப்பட்டது. அத்துடன் அந்த பணம் இருந்த திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் என்று அச்சடிக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்புநிற சின்ன துணிப்பை மற்றும் பிரவுன்கலர் பழைய கர்சிப் ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர், அவரிடம் இந்த அலுவலகத்திற்கு எப்படி வந்தீர்கள், எதில் வந்தீர்கள் என்று கேட்க, அதற்கு அவர் தான் தன்னுடைய மகன் சீனிவாசன் பெயரில் உள்ள TN84X5295 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தில் வந்ததாக கூறினார். ஆகையால், வட்டாட்சியர் அலுவலக கட்டிட நுழைவுவாயிலுக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி இருசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அதில் சிவகாசி வட்டம் அனுப்பன்குளம் கிராமத்தை சேர்ந்த மணிகண்டன் மனைவி காளீஸ்வரி என்பவர் கிரையம் பெற்ற புல எண். 470/1க்கு பதிவு மாறுதல் செய்து பட்டா வழங்க கோரி மனு எண்.141077/2020, SR.No.2472/2020, நாள். 24.10.2020ன் பிரகாரம் மனுசெய்து, அந்த மனுமீது சிவகாசி வட்டாட்சியர் அலுவலக நிலஅளவைப் பிரிவு

அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலுவையில் உள்ள அலுவலக கோப்பு இருந்தது. அதுபற்றி, அதாவது நிலஅளவைப் பிரிவில் நடவடிக்கையில் உள்ள அலுவலக கோப்பானது எப்படி உங்களிடம் உள்ளது என்று அவரிடம் கேட்க, அந்த கோப்பானது அலுவலகத்திலிருந்துதான் பெற்றுச்சென்றேன், ஆனால் யாரிடமிருந்து பெற்றுச்சென்றேன் என்று தற்போது ஞாபகமில்லை என்று கூறினார். இதுசம்மந்தமாக, நிலஅளவைப் பிரிவு அலுவலக பொறுப்பு அலுவலரான காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட வட்டத்துணை ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்களிடம் கேட்க, இந்த கோப்பானது அலுவலக கோப்புதான் என்றும், இது சம்மந்தப்பட்ட நில அளவர் திரு.பெரியசாமி அவர்களின் நடவடிக்கைக்கு பின்பு, மேல்நடவடிக்கைக்காக முதுநிலை வரைவாளர் திருமதி.முத்துமாரி அவர்களின் நடவடிக்கைக்காக நிலுவையில் உள்ளது என்றும், அந்த கோப்பானது தனிநபர் திரு.பொன்ராஜ் அவர்களிடம் எப்படி சென்றது என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். இதுசம்மந்தமாக காலம் 5 வரிசை எண்.3ல் கண்ட முதுநிலை வரைவாளர் திருமதி.முத்துமாரி அவர்களிடம் கேட்க, அந்த கோப்பானது அலுவலக கோப்புதான் என்றும், அந்த கோப்பு திருத்தம் செய்வதற்காக திரும்ப நில அளவர் திரு.பெரியசாமி அவர்களிடமே கொடுத்துவிட்டேன் என்றும், அந்த கோப்பானது தனிநபர் திரு.பொன்ராஜ் அவர்களிடம் எப்படி சென்றது என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். ஆகையால், இதுசம்மந்தமாக காலம் 5 வரிசை எண்.4ல் கண்ட நில அளவர் திரு.பெரியசாமி அவர்களிடம் கேட்க, அந்த கோப்பானது அலுவலக கோப்புதான் என்றும், அதை தான் நடவடிக்கை எடுத்து மேல்நடவடிக்கைக்காக முதுநிலை வரைவாளர் திருமதி.முத்துமாரி அவர்களிடம் கொடுத்துவிட்டேன் என்றும், திரும்பவும் அவர் அந்த கோப்பை திருத்தம் செய்வதற்காக தன்னிடம் ஒப்படைக்கவில்லை என்றும், அந்த கோப்பானது தனிநபர் திரு.பொன்ராஜ் அவர்களிடம் எப்படி சென்றது என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். ஏற்கனவே அந்த தனிநபரிடமிருந்து, அதாவது மேற்படி அலுவலக கோப்பை வைத்துள்ள தனிநபரிடமிருந்து பணம் ரூ.57,000/-த்தை நிலஅளவைப் பிரிவு அலுவலர்களுக்கு கொடுக்க வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக் கருதி கைப்பற்றியுள்ளதால், இந்த அலுவலக கோப்பும் மேற்படி நிலஅளவைப் பிரிவு அலுவலர்கள் மூலம் அவர்களுக்கு தெரிந்தே இந்த தனிநபரிடம் சென்றிருக்கும் என கருதி, மேற்படி கோப்பானது கைப்பற்றப்பட்டது. அதேபோல் காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட தனிநபரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தை கத்தையாக மடிக்கப்பட்ட நிலையில் பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ஒரு கத்தையில் 2000 ரூபாய் நோட்டுக்கள் 5, 500 ரூபாய் நோட்டுக்கள் 5 ஆக மொத்தம் ரூ.12,500/-ம், மற்றொரு கத்தையில் 500 ரூபாய் நோட்டுக்கள் 34 ஆக மொத்தம் ரூ.17,000/-ம், அத்துடன் தனியாக 200 ரூபாய் நோட்டு 1ம், 50 ரூபாய்

நோட்டுக்கள் 4ம், 20 ரூபாய் நோட்டுக்கள் 2ம், 10 ரூபாய் நோட்டுக்கள் 3ம் ஆக மொத்தம் ரூ.470/-ம் மொத்த கூட்டுத்தொகையாக ரூ.29,970/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் ரூ.29,970/-ல் ரூ.17,000/- அதாவது கத்தையாக இருந்த 500 ரூபாய் நோட்டுக்கள் லட்சுமி விலாஸ் வங்கி, சிவகாசி கிளையில் தனது பெயரில் உள்ள சேமிப்பு கணக்கில் இருந்து வீட்டு செலவிற்காக இன்று (19.11.2020) மாலை சுமார் 04.00 மணியளவில் எடுத்த தொகையை வைத்திருந்ததாகவும், அவ்வாறு அந்த வங்கியில் எடுத்ததற்கு வங்கி கணக்கு புத்தகத்தில் பதிவுகள் உள்ளது என்று வங்கி சேமிப்பு கணக்கு (சேமிப்பு கணக்கு எண். 0673301000006339) புத்தகத்தை காண்பித்துவிட்டு, ரூ.470/- தன்னுடைய செலவிற்காக கொண்டுவந்ததாகவும், மீதித் தொகை ரூ.12,500/-ஐ தான் எப்போதும் செலவிற்காக கையிலேயே வைத்திருப்பதாகவும் கூறினார். ஆகையால், லட்சுமி விலாஸ் வங்கி, சிவகாசி கிளையில் அவரது பெயரில் உள்ள சேமிப்பு கணக்கில் இருந்து வீட்டு செலவிற்கு எடுத்ததாக சொன்ன ரூ.17,000/-, அவருடைய செலவிற்காக கொண்டுவந்ததாக சொன்ன ரூ.470/- ஆக மொத்தம் ரூ.17,470/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள பணம் ரூ.12,500/க்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அந்த பணம் ரூ.12,500/-ஐ நிலஅளவைப் பிரிவு அலுவலர்களுக்கு கொடுக்க வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக் கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர், காலம் 5 வரிசை எண். 1 மற்றும் 2, காலம் 6 வரிசை எண். 1 மற்றும் 2ல் கண்ட தனிநபர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. இந்த திடீர் இணை ஆய்வு இன்று 20.11.2020 ஆம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று 19.11.2020ம் தேதி மாலை சுமார்.06.00 மணிமுதல் இன்று 20.11.2020ம் தேதி அதிகாலை 01.30 மணிவரை எனது தலைமையில் சிவகாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் நிலஅளவைப்பிரிவில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு சோதனையின்போது திரு.முடபாலசுப்பிரமணியன், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கைப்பற்றப்பட்ட ரூ.700/- அவரை பணிநிமித்தமாக சந்திக்க வந்த பொதுமக்களிடம் பெற்ற லஞ்சப்பணம் எனத் தெரியவந்ததால், மேற்படி திரு.முடபாலசுப்பிரமணியன், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி அவரிடமிருந்து லஞ்சப்பணம் பெற்று வைத்திருந்த குற்றத்திற்கும், தனிநபரான திரு.பொன்ராஜ், த/பெ.சுந்தரம், கதவு எண்.250/1, எஸ்டேட் பேங்க் காலனி, சாட்சியாபுரம், சிவகாசி மற்றும் மற்றொரு தனிநபரான திரு.ஆறுமுகம், த/பெ.பரமசிவம், கதவு எண்.6/1037, பாக்கியலட்சுமி ஹோட்டல், செங்கமலநாட்சியாபுரம் கிராமம், சாட்சியாபுரம், சிவகாசி ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் முறையே ரூ. 57,000/- மற்றும் 12,500/- ஆக மொத்தம் ரூ. 69,500/-ம்,

சிவகாசி வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தில் உள்ள நில அளவைப்பிரிவில் பணிபுரியும் வட்ட துணை ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள், கோரிக்கைகளுக்காக மேற்படி தனிநபர்கள் மூலம் அவரை சந்தித்த / சந்திக்க வந்த பொதுமக்களிடம் அவர் செய்யக்கூடிய / செய்த அரசுப்பணிக்காக பணம் பெற்று அவரிடம் கொடுப்பதற்காக கொண்டு வந்த லஞ்சப்பணம் என தெரியவந்ததால், மேற்படி தனிநபர்கள்மீது வட்ட துணை ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியனுக்கு அரசுப்பணியை செய்ததற்கும் /செய்வதற்கும் பொதுமக்களிடமிருந்து லஞ்சப்பணத்தை பெற்று கொடுக்க இடைத்தரகர்களாக செயல்பட்ட குற்றத்திற்கும், வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கை, வட்டத்துணை ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன், தனிநபர்களான திரு.பொன்ராஜ் மற்றும் திரு.ஆறுமுகம் ஆகியோர்களின் தனித்தனி வாக்குமூலங்கள், ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் அந்தப்பணம் இருந்த திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் என்று அச்சடிக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்புநிற சின்ன துணிப்பை, பிரவுன்கலர் பழைய கர்சிப் மற்றும் சிவகாசி வட்டம் அனுப்பங்குளம் கிராமத்தை சேர்ந்த மணிகண்டன் மனைவி காளீஸ்வரி என்பவர் கிரையம் பெற்ற புல எண். 470/1க்கு பதிவு மாறுதல் செய்து பட்டா வழங்க கோரி மனு செய்து நடவடிக்கை எடுத்து நிலுவையில் இருந்த அலுவலக கோப்பு ஆவணங்களுடன் இன்று (20.11.2020) மதியம் 01.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (ஆ.பொன்ராஜ்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். (குடிமைப்பொருள் வட்டாட்சியர்,விருதுநகர் தாலுகா,விருதுநகர்).Sir, Received this complaint and registered a case in Virudhunagar V&AC Cr.No.6/2020 u/s 7 of the PC (Amendment) Act, 2018 on 20.11.2020 at 13.00 hrs. First Information Report (Original) and complaint are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Spl. Judge for PC Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd)P.Karuppiah, 20.11.2020, DSP, V&AC, VNR.

DSP/V&AC/VNR
20/11/2020